ஏலக்காய் பயிரிட குத்தகை.

*வினா எண் 758.—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் ஏலக்காய் பயிரிடுவதற்காக எவ்வளவு நிலங்கள் குத்தகைக்கு (தனியார்களுக்கு) விடப்பட்டது ?

(ஆ) அதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மொத்தம் 627.50 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் தனியார்களுக்கு ஏலக் காய் பயிரிடுவதற்காகக் குத்தகைக்கு விடப்பட்டது.

(ஆ) அதன் மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 6,15,647.66 ஆகும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளில் ஏலக்காய் பயிரிடுவதற்குத் தனியார்களுக்கு நிலங்கள் குத்தகை விடப்பட்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத்தான், குத்தகை விட வேண்டும், இனிமேல் தனியார்களுக்கு விடக்கூடாது என்று அரசு உத்தரவு இருக்கிறதா? இதற்கு முன்னால் தனியார்களுக்கு 20 ஆண்டு களுக்கு, குறைந்த தொகையிலே குத்தகை விடப்பட்டிருக்கிறதே, அந்தக் குத்தகை முடிந்தவுடன் அதை அரசு கையப்படுத்தி, ஏழை விவசாயிகளுக்கு 5 ஏக்கர் அளவுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—11—1979 ஆம் நாள் அரசு ஆணை ஒன்றின் மூலம் இந்த ஏலக்காய் குத்தகையினுடைய நடைமுறையில் மாற்றங்கள் செய்து அரசினு டைய கொள்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே நீண்ட காலமாக, தொடர்ந்து அதைக் குத்தகை எடுத்தவர்கள், அவர்களுடைய சொத்தைப்போல பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வந்தார்கள். அதிலே 76 ஆம் ஆண்டிலே சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அதற்குப் பிறகு, இந்த அரசு வந்ததற்குப் பிறகு 79 ஆம் ஆண்டு பரிசீலித்து அப்படி ஏலக்காய் குத்தகையைப் பரம்பரையாக அனுபவித்துக்கொண்டு வருகிற முறை மாற்றப் பெற வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. ஆகவே முடிந்த குத்தகைகளை மறுபடியும் புதுப்பிக்கக் கூடாது என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

அப்படிப் புதுப்பிக்கிறபோது அந்த ஏலக்காய் விவசாயத்தையே நம்பிக் கொண்டிருக்கிற ஏழை விவசாயிகளுக்கு அதைக் கொடுக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவில் வெளியிடப்

பட்டிருக்கிறது. அதுவே 5 ஏக்கர், அதாவது 2 ஹெக்டேர்தான் இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 15 வருடம் தவணை கொடுத்து, பிறகு வேண்டுமானால் ஒரு 5 வருடக் காலம் நீட்டிக்க லாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்தப் புதிய திட்டத்தின்படிதான், இங்கே தரப்பட்டிருக்கிற தகவலின்படிதான், இந்த மூன்று ஆண்டுகளில் புதிய ஒப்பந்தம் செய்யப்பட் டிருக்கிறது. ஆணையை எதிர்த்துக்கூட, பரம்பரையாக குத்தகையை அனுபவித்து வந்தவர்கள், ஏழைகள் என்று சொல்லிக்கொண்டு லட்சக்கணக் கான ரூபாய்களை வைத்திருப்பவர்கள், பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து வழக்கு மன்றத்திற்குப் போய் அரசாங்கத்தை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏலக்காய் தோட்டம் பயிரிடுவதைப் பொறுத்தவரையில் என்னுடைய பகுதியிலே மாவடி என்ற இடத்தில் கிட்டத்தட்ட கொழுத்த பணக்காரர்கள் தான் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை எடுத்து ஏழை களுக்குக் கொடுக்க அரசு முன் வருமா? அதற்கு அரசு முயலுமா ? இன்னும் வேறு பல இடங்களில் உண்மையாகவே ஏழை எளிய மக்கள் பயிரிட்டுக்கொண் டிருக்கிறார்கள், ஆனால் அவர்களை அதிகாரிகள் துன்புறுத்தி வெளியேற்ற ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் முதற் பகுதிக் குத்தான் நான் முதலிலேயே விரிவான பதிலைத் தந்திருக்கிறேன். பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் 100 ஏக்கர்களுக்கு மேல் நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் பரம்பரையாக நீண்ட காலமாக இந்தக் குத்தகை பாத்தியதை அனுபவித்து வந்தார்கள். அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்றுதான் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. சிறிய ஏழை விவசாயிகள், நிலமற்றவர்கள், குறிப்பாக அந்த ஏலக்காய் விவசாயத்தையே நம்பி வாழக் கூடிய அந்தப் பகுதி விவசாயிகளுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று தீர்மானமாக முடிவு செய்து, உத்தரவு போட்டிருக்கிறது. ஆகவே அந்த ஏழை விவசாயிகளுக்கு எந்தவிதமான தொல்லையும் வன இலாகாவினரால் அல்லது அதிகாரிகளால் ஏற்படுத்த முடியாது. அப்படி எங்காவது நடை பெறுமானால், அது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை எடுத்து அந்த ஏழை விவசாயி களுக்கு ஏற்படுகிற அந்தக் கஷ்டங்களை இந்த அரசு நீக்கும்.

[1981 ஏப்ரல் 25

திரு. பெ. சு. திருவேங்கடம்: இந்த அரசு நிலம் தனிப்பட்டவர்களுக்கு இப்போது குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி குத்தகைக்கு விடும்போது ஏக்கருக்கு இவ்வளவு தர வேண்டும் என்று அரசாங்கமே நிர்ணயம் செய்கிறதா அல்லது டெண்டர்கள் மூலம் குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்படுகிறதா? ஒருமுறை எவ்வளவு ஆண்டுகளுக்கு என்று இந்தக் குத்தகை விடப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: முன்னால் இருந்த முறை டெண்டர் அல்ல. பொது ஏலத்தில் விடப்பட்டு வந்தது. ஏலத்தில் எடுக்கிறபோது பெரும் பணக்காரர்கள், பெரிய நிலச்சுவாந்தார்கள், விவசாயிகள் எல்லாம் எடுத்து வருவதற்கான வாய்ப்பு இருந்தது. ஆகவே அந்த முறையை மாற்றி இப்போது நிலமற்ற ஏலக்காய் விவசாயத்தை மாத்திரமே நம்பியிருக்கிற ஏழை விவசாயிகளுக்குத் தருவதற்கான ஆணையை அரசாங்கம் இப்பொழுது பிறப்பித்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: ஏலக்காய் சாகுபடி என்பது அதிகமான வருமானம் வரும் மகசூல். இது ஏழை எளிய விவசாயிகளுக்குத் தரப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு விவசாயிக்கு இரண்டரை ஹெக்டேர்ஸ் என்று சொன்னால், அது ஏறக்குறைய ஐந்து ஏக்கர் வரும். எனவே இந்த அளவைக் குறைத்து ஒரு ஏக்கருக்கு மேற்படாமல் விவசாயிகளுக்குக் கொடுத்தால் அதிகப்படியான விவசாயிகளுக்குப் பயன் அளிக்கும் அல்லவா? அதுமாதிரி அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்த ஏலக்காய் விவசாயத்தைப் பொறுத்தவரையில் ஒரு குறைந்தபட்ச வயபிள் யூனிட் என்று ஒரு விவசாயி அதற்குள் பாடுபட்டால் அதில் போடுகிற முதலீடும் அவரது உழைப்பும் எல்லாம் சேர்ந்து அவருக்குப் பலன் இருக்கவேண்டும். அதுபற்றி ஏலக்காய் வாரியத்திடம், இந்திய சர்க்கார் அமைத்திருக்கிற ஏலக்காய் வாரியத்தினிடம் கலந்து ஆலோசித்து அவர்கள் தெரிவித்த ஆலோசனைப்படி ஒரு குறைந்தபட்ச வயபிள் யூனிட் ஐந்து ஏக்கர் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவேதான் ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் பரப்பளவு. காட்டுக்குள்ளே பாடுபடும்போது சில பகுதிகள் பாறையாக இருக்கும், சில பகுதிகள் விளையாத இடமாக இருக்கும் என்கிற அந்தச் சூழ்நிலையை மனதில் வைத்து ஒருவருக்கு ஐந்து ஏக்கர்கள் அல்லது 3 ஹெக்டேர் என்று தீர்மானித்துள்ளோம்.

திரு. வே. இரா. ஜெயராமன்: கனம் அமைச்சர் அவர்கள் மாவாடி பகுதியில் ஏலக்காய் பயிரிட நிலங்களைக் குத்தகைக்கு எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பணக்காரர்கள் பெயர்களை அறிவிக்க இயலுமா?

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பட்டியல் கொடுக்க முடியாது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : இப்போது புதிய சட்டத்தை அரசு கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன். ஒவ்வொருவரும் 50, 70, 100 ஏக்கர்கள் என்று லீஸ் எடுத்து வைத்துக் கொண்டு, பாரம்பரையாக வைத்துக் கொண்டு இருப்பதை மாற்றியமைக்கும் வகையில் சட்டம் கொண்டு வந்து ஏழைகளுக்குக் கிடைக்கும் அளவில் செய்திருப்பதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் சில ஏரியாக்களில் மொஸைக் டிஸீஸ் இந்த ஏலக்காய் பயிருக்கு வந்திருக்கிறது. அந்த மொஸைக் டிஸீஸ்-னால் ஏலக்காய் பயிர் அழிந்துபோய் விடுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? இந்த நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது அவர்கள் மேலும் பணம் செலவு செய்து ஏலக்காய் விவசாயம் செய்யும்போது இந்த மொஸைக் டிஸீஸ் வந்து அந்தப் பயிரை அழித்தால் அவர்களுக்குப் பெரிய நஷ்டம் ஏற்படும். ஆகவே அந்த வியாதி வராமல் தடுத்து நிறுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த நோய் ஏற்பட்டு ஏலக்காய் பயிரை நாசம் செய்கிறது அல்லது அழிக்கிறது என்ற தகவல் இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இதைப்பற்றிய தகவல்கள் சம்பந்தப்பட்ட ஏழை விவசாயிகளிடமிருந்து வருமேயானால் அதற்கான உதவிகளை ஏழை விவசாயிகளுக்கு, மற்ற விவசாயிகளுக்கும் உதவிகள் அளிப்பதுபோல் இந்த ஏலக்காய் குத்தகை விவசாயிகளுக்கும் அரசாங்கம் உதவிகள் வழங்கும்.

திரு. என். வரதராஜன் : இந்த ஏலம் பயிரிடும் நிலங்கள் 99 ஆண்டு குத்தகை என்ற பெயரில் இன்றைக்கும் இருந்து வருகிறது. ஆகவே அந்த குத்தகையை இடையில் நாம் நிறுத்திவிட்டு, இந்த குத்தகை நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 30 கொடுக்கிறது என்ற வரைமுறை இருக்கிறது. அந்தக் குத்தகை காலம் முடியும்வரை காத்திராமல் குத்தகையை உயர்த்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : முடிந்து போன குத்தகையை மீண்டும் புதுப்பிக்கமாட்டோம் என்று சொன்னதற்கு வழக்குமன்றத்திற்குப் போய் தடுப்பாணை பெற்றிருக்கிறார்கள். அதிலேயே இந்தச் சங்கடம் என்றால் உயிரோடு இருக்கிற ஒப்பந்தக் காலத்தை ரத்து செய்வதென்றால் இன்னும் எவ்வளவு பெரிய சிக்கல் ஏற்படும் என்பதை உணர்ந்துகொள்ளலாம். இருந்தாலும் அரசாங்கம் இதில் மிகுந்த தீவிர கவனம் செலுத்திக்

கொண்டிருக்கிறது. எதற்கெடுத்தாலும் வழக்குமன்றத்திற்குப் போவது என்பது இன்றைக்கு வழக்கமாகிவிட்டது. வழக்குமன்றத்திலும் எல்லா வற்றிற்கும் தடையாணை கொடுப்பது என்பதும் இன்றைக்கு நடைமுறையில் இருந்து கொண்டு வருகிறது. ஆகவே எந்தத் திட்டத்தையும் அமல்படுத்த முடியாமல் இன்றைக்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. உறுப்பினர் கருத்து அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. சட்டத் திருத்தங்கள் மூலம் இதைச் செய்ய முடியுமா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். சட்டத்தைத் திருத்தினாலும் அந்தச் சட்டமும் செல்லாது என்றுகூட வழக்கு மன்றத்திற்குப் போவார்கள்.

வடலூர் சத்திய ஞானசபை

* வினா எண் 759.—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடலூரில் கட்டப்பட்டுள்ள சத்திய ஞானசபை பழுது அடைந்து இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

(முற்பகல் 9-20)

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமலிங்க சுவாமிகள் வசித்த ஊர் வடலூர் ஆகும். அங்கே வருகின்றவர்கள் தமிழ் நாட்டிலே இருந்து மட்டும் வரவில்லை; வெளி மாநிலங்களிலே இருந்தும், வெளி நாடுகளிலே இருந்தும் வருகின்றார்கள். அங்கே மாதம் ஒருமுறை ஆறு திரைகளை நீக்கி, ஜோதியைக் காட்டுகிறார்கள். அந்த பிரசித்தி பெற்ற இடத்தில், புகழ்பெற்ற இடத்தில், அவர்கள் பேரிலே மண்டபம் கட்டி விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வடலூரிலே வள்ளலார் ஏற்படுத்திய சத்திய ஞான சபை புதுப்பிக்கப்பட்டு, அங்கே இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர் பிறந்த மருதூர் கிராமத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர் பிறந்த அந்த மருதூர் கிராமத்திலே அவருக்கு நினைவு மண்டபம் எழுப்புவதற்கு, அந்த ஊரைச் சார்ந்த பலர் முன்னாலே முயற்சி எடுத்து, அது